## (ஐ) கைத்தொழில் அபிவிருத்தி*

(அ) பொதுப்படைப் போக்குகள்

1964ம் ஆண்டு, நடைமுறை விலைகளுக்கேற்ப கைத்தொழில் உற்பத்தியில் மொத்தப் பெறுமானத்தில் 1963ம் ஆண்டிலும் பார்க்கத் திடமானளவு அதிகரிப்பு ஏற்பட்டிருக்கின்றதென்பதை, மத்திய வங்கியின் உற்பத்தித் தொழில் நிலையங்களின் கணிப்பு எடுத்துக் காட்டுகின்றது. மொத்த உற்பத்திகளினது பெறுமானத்தின் அதிகரிப்பு, கடந்த வருடத்திற்குரிய 444 இலட்சம் ரூபாக்கள் கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில், இவ்வாண்டு 1058 இலட்சம் ரூபாக்களாக விளங்கியது. ஆயினும் இவ்வுற்பத்திப் பெறுமானத்தின் அதிகரிப்பு உண்மை உற்பத்தியின் விரிவை முழுமையாகப் பிரதிபலிக்கவில்லை. குறிப்பாக இவ்வாண்டிறுதியில் இறக்குமதி செய்யப்பட்ட மூலப்பொருட்களுக்கும், அவற்றிற்கான துணைக் கருவிகளுக்கும் குறைபாடு ஏற்பட்டது. இதனுல் சில கைத்தொழில் முயற்சிகள் தடைப்பட்டமை இயந்திரங்களின் பயன்படுத்தப்படாத கொள்ளளவு ஆற்றலின் பொதுவான அதிகரிப்பிற்குக் காரணமாக விளங்கியது.

இம் மொத்தப் பெறுமானங்களின் அதிகரிப்பிற்குப் பெரும்பாலும் இரு காரணங்களைக் குறிப்பிடலாயினும், இக் காரணிகளின் முழுத்தாக்கத்தையும் அளவிடுதல் கஷ்டம். முதலாவது இவ்வாண்டிலேற்பட்டு, மொத்தப் பெறுமானத்தை அதிகரித்த விலைகளில் ஏற்றம், மற்றையது முன்பு இருப்பிடங்களின் அடிப்படையில் நடாத்தி வந்த பல சிறிய முயற்சிகள் (சிறப்பாக ஆடைக் கைத்தொழில்) தொழில் நிலையங்களாகப் பதிவு செய்யப்பட்டமை. மத்திய வங்கியின் விமரிசையின்படி, 1963ம் ஆண்டில், 433 உற்பத்தித் தொழில் நிலையங்களெனக் கணக்கெடுக்கப்பட்டன. ஒப்பிடும் பொழுது, இவ்வாண்டில் கணக்கெடுப்பு 717 நிலையங்களை உள்ளடக்கியது. கிட்டத்தட்ட இப்புதிய உற்பத்தித் தொழில் நிலையங்களில் அரைவாசி, ஆடைக் கைத்தொழில் உலோகப் பொருட்களாகிய இரு கைத்தொழில்களிலும் ஈடுபட்டிருந்தன. இத்தொழில் நிலையங்களை, எமது 1964ம் ஆண்டு அட்டவணையில் சேர்த்தமை, புள்ளிவிபர அடிப்படையில் பெறுமானத்தை அதிகரித்திருக்கும். இது ஓரளவிற்கு உண்மையிலேயே ஏற்பட்ட உற்பத்தியின் அதிகரிப்பைச் கூட்டிக் காட்டியிருக்கலாம்.

தரவுகளின்படி, 1963ம் ஆண்டில் ஏற்பட்ட 11·4 சதவீதக் கைத்தொழில் உற்பத்திப் பெறுமானத்தின் விரிவு வீதத்துடன் ஒப்பிடுகையில், இவ்வாண்டில் இது 24·5 சதவீதமாக விளங்கிற்று. புதிய கைத்தொழில் முயற்சிகளில் ஏற்பட்ட வளர்ச்சியைக் கைத்தொழிலுற்பத்தியின் முழு பெறுமானத்தில் உயர்ந்த முக்கியத்துவத்தை வகிப்பதும், மரபுவழிவந்த பிரதான பொருட்களின் பதனீடுகளை உள்ளடக்குவனவுமாகிய தயாரிக்கப்பட்ட எண்ணெய் தேங்காய்த் துருவல், புண்ணுக்குப் போன்ற தெங்குப் பொருட்களை நீக்கி இவ்விரிவினை நோக்கின் 1963ம் 1964ம் ஆண்டுகளில் ஏற்பட்ட அதிகரிப்பு வீதங்கள் முறையே 18·4 சதவீதமாகவும், 31·4 சதவீதமாகவும் விளங்குகின்றன.

1964ம் ஆண்டு உற்பத்திப் பெறுமானத்தின் அதிகரிப்பு, கைத்தொழிற்றுறையில் வேலைநிலையை விரிவடையச் செய்தது. ஆண்டுத் தரவுகளை ஒப்பிடும் பிரச்சினைகளினுல் இதன்*உண்மையானளவைக் கணக்கிட முடியாதிருக்கின்றது. ஆடைக் கைத்தொழிலில் வேலைநிலையின் விரிவு, உற்பத்திப் பெறுமானத்தில் குறிப்பிடத் தக்களவு கூடுதலேற்படுத்தவில்லை. இதற்கு முரணுக மூலதனச் செறிவு உயர்ந்து விளங்கும் உற்பத்தி முறைகளையுடைய தனது உற்பத்தியில் பெறுமானத்தின் மிகக் கூடியளவு பங்கிற்கு மூலப்பொருட்கள் வகை கூறுவதுமான உலோகப் பொருட்

---

* இப்பிரிவில் கொடுக்கப்பட்டுள்ள கைத்தொழில் உற்பத்திப் பெறுமானத்தின் புள்ளி விபரங்கள் யாவும் மகா வங்கியினுல் நடாத்தப்பட்ட அளவீட்டை அடிப்படையாகக் கொண்டன. 1964ம் ஆண்டில் கணக்கெடுக்கப்பட்ட தொழில் நிலையங்களின் எண்ணிக்கை, இவற்றினது 1963ம் ஆண்டுத் தரவுகளிலும் பார்க்கக் குறிப்பிடத்தக்களவில் கூடுதலாயிருந்தது. இக்காரணத்தால், 1964ம் ஆண்டில் காட்டப்பட்ட கைத்தொழில் உற்பத்தியினதும், வேலைநிலையினதும் ஆண்டுப் பெறுமானத்தின் அதிகரிப்பு இவ்வாண்டினது உண்மையான அதிகரிப்பைக் குறிக்கின்றது, என்று கருதமுடியாது. மேலும், இப்பிரிவில் கொடுக்கப்பட்டுள்ள விரிவின் ஆண்டு விகிதம், தேசிய உற்பத்தியிலும், செலவிலுமுள்ள பிரிவினது ஆண்டு விகிதத்தோடு ஒப்பிடற் குரியதல்ல. உண்மையில் இறுதியாகக் குறிக்கப்பட்ட மதிப்பீடு மொத்த உற்பத்திப் பெறுமான மாற்றத்திற் கெதிராகக் கைத்தொழிலில் சேர்க்கப்பட்ட பெறுமானத்தைக் குறிக்கின்றது. இது 1964ம் ஆண்டு மகாவங்கியின் கைத்தொழில் அளவீட்டின் அதிகரித்த படுகைக் கேற்பச் சீராக்கப்பட்டபின் பெறப்பட்டுள்ளது.

அட்டவணை II (ஐ) அ—1

# கைத்தொழில் உற்பத்தியும் வேலைநிலையும் 1960—64 புள்ளிவிபரச் சுருக்கம்

| | தொழில நிலையங்களின் எண்ணிக்கை | | | | | ஊழியர்களின் எண்ணிக்கை | | | | | மொத்த ஆள் வேலை நாட்கள் (1000) | | | | | மொத்தக் கூலிச் செலவு (10 இலட்சம் ரூபாய்களில்) | | | | | உற்பத்தியின் பெறுமானம் (பத்து இலட்சம் ரூபாய்களில்) | | | | | ஒரு ஆள்—வேலை நாளுக்கான கூலி (ரூபாய்களில்) | | | | | ஒரு தொழிலாளிக்கான ஆள்—வேலை நாட்கள் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1960 | 1961 | 1962 | 1963 | 1964 | 1960 | 1961 | 1962 | 1963 | 1964 | 1960 | 1961 | 1962 | 1963 | 1964 | 1960 | 1961 | 1962 | 1963 | 1964 | 1960 | 1961 | 1962 | 1963 | 1964 | 1960 | 1961 | 1962 | 1963 | 1964 | 1960 | 1961 | 1962 | 1963 | 1964 |
| I. பல்வேறு உணவுத் தயாரிப்புக்கள் .. | 47 | 52 | 57 | 60 | 62 | 2472 | 2624 | 3151 | 3433 | 3520 | 606 | 664 | 797 | 871 | 901 | 4·5 | 4·7 | 5·4 | 5·8 | 6·0 | 44·0 | 146·9 | 147·8 | 147·6 | 160·7 | 7·40 | 7·08 | 6·77 | 6·62 | 6·65 | 245 | 253 | 253 | 254 | 256 |
| II. பழுதடையாமலும், கலனிட்டு வைக்கப்பட்டுள்ளதுமான பழங்களும், மரக்கறிகளும் .. | 8 | 9 | 14 | 16 | 32 | 120 | 149 | 208 | 238 | 358 | 34 | 42 | 58 | 67 | 97 | 0·1 | 0·2 | 0·2 | 0·3 | 0·4 | 1·3 | 1·6 | 2·3 | 3·4 | 4·5 | 3·94 | 3·95 | 4·16 | 4·30 | 4·63 | 283 | 282 | 279 | 282 | 271 |
| III விஸ்கோத்தும் இனிப்புப் பதார்த்தங்களும் .. | 22 | 39 | 49 | 62 | 82 | 907 | 1302 | 1699 | 2065 | 2590 | 280 | 395 | 487 | 591 | 693 | 1·0 | 1·3 | 1·6 | 2·3 | 2·6 | 11·5 | 18·2 | 21·9 | 28·8 | 30·9 | 3·63 | 3·36 | 3·36 | 3·94 | 3·78 | 309 | 303 | 287 | 286 | 268 |
| IV. வாயுப் பானங்கள் .. | 17 | 23 | 24 | 25 | 33 | 860 | 939 | 949 | 988 | 1088 | 252 | 273 | 275 | 284 | 316 | 2·0 | 2·1 | 2·1 | 2·1 | 2·5 | 8·3 | 7·8 | 10·0 | 11·4 | 13·4 | 7·94 | 7·62 | 7·56 | 7·54 | 8·00 | 293 | 291 | 290 | 287 | 294 |
| V. பியரும் ஸ்ரவுட்டும் .. | 1 | 1 | 1 | 1 | 1 | 187 | 198 | 309 | 303 | 300 | 58 | 61 | 67 | 68 | 84 | 0·3 | 0·3 | 0·4 | 0·4 | 0·5 | 3·1 | 2·4 | 2·2 | 2·4 | 2·7 | 5·27 | 5·34 | 5·19 | 5·45 | 5·50 | 308 | 308 | 309 | 303 | 280 |
| VI. புகையிலை .. | 23 | 23 | 23 | 23 | 23 | 3574 | 3664 | 3955 | 3960 | 4214 | 975 | 1023 | 1104 | 1104 | 1175 | 8·2 | 8·3 | 9·2 | 9·6 | 10·1 | 30·0 | 29·0 | 35·0 | 39·0 | 46·2 | 8·41 | 8·12 | 8·37 | 8·66 | 8·64 | 273 | 279 | 279 | 279 | 279 |
| VII. ஆடைகள் .. | 22 | 24 | 32 | 34 | 103 | 2606 | 2787 | 3947 | 4500 | 6955 | 768 | 816 | 1102 | 1261 | 1749 | 2·6 | 2·9 | 3·9 | 4·3 | 6·9 | 19·4 | 19·8 | 29·3 | 38·4 | 54·9 | 3·40 | 3·56 | 3·56 | 3·43 | 3·93 | 295 | 293 | 279 | 280 | 251 |
| VIII. பாதரட்சைகளும், தோற் பொருட்களும் | 9 | 9 | 10 | 11 | 36 | 1383 | 1289 | 1421 | 1616 | 1990 | 365 | 348 | 373 | 419 | 538 | 2·2 | 2·4 | 3·0 | 3·3 | 4·5 | 8·3 | 8·5 | 19·6 | 22·3 | 23·4 | 6·09 | 6·80 | 7·96 | 7·86 | 8·30 | 264 | 270 | 262 | 259 | 270 |
| IX. பல்வேறு இரசாயணப் பொருட்களும் .. | 30 | 37 | 56 | 70 | 96 | 1569 | 1740 | 2070 | 2498 | 3306 | 426 | 492 | 609 | 673 | 884 | 2·2 | 3·2 | 3·8 | 4·6 | 6·4 | 36·4 | 40·3 | 51·5 | 56·0 | 73·7 | 5·68 | 7·25 | 6·33 | 6·98 | 7·21 | 267 | 282 | 295 | 270 | 267 |
| X. காகிதப் பொருட்களும் காகித மட்டையிலான பொருட்களும் .. | 19 | 21 | 28 | 33 | 57 | 804 | 892 | 1139 | 1316 | 2187 | 198 | 226 | 300 | 374 | 638 | 1·7 | 2·0 | 2·5 | 2·9 | 3·8 | 12·5 | 13·9 | 15·4 | 18·3 | 30·1 | 8·68 | 8·77 | 8·29 | 7·70 | 5·93 | 246 | 253 | 263 | 284 | 292 |
| XI. உலோகப் பொருட்கள் | 20 | 23 | 26 | 28 | 92 | 496 | 593 | 770 | 876 | 2629 | 137 | 166 | 217 | 240 | 743 | 0·7 | 0·9 | 1·3 | 1·2 | 4·1 | 7·4 | 9·1 | 11·2 | 15·1 | 38·5 | 4·56 | 4·98 | 5·11 | 5·17 | 5·52 | 260 | 279 | 272 | 270 | 283 |
| XII. தயாரிக்கப்பட்ட பொருட்கள் (முன்பு சேர்க்கப்படாதவைகள்) .. | 23 | 30 | 41 | 44 | 69 | 323 | 499 | 616 | 671 | 1058 | 87 | 137 | 167 | 191 | 279 | 0·3 | 0·5 | 0·6 | 0·8 | 1·2 | 1·5 | 3·7 | 4·3 | 5·8 | 11·0 | 3·23 | 3·56 | 3·75 | 4·11 | 4·31 | 270 | 275 | 271 | 285 | 264 |
| XIII. பீங்கான் பொருட்கள் | 1 | 1 | 1 | 1 | 1 | 178 | 193 | 240 | 261 | 300 | 53 | 57 | 66 | 81 | 86 | 0·4 | 0·4 | 0·5 | 0·6 | 0·8 | 1·0 | 1·1 | 1·9 | 2·5 | 2·4 | 7·29 | 7·46 | 7·95 | 7·79 | 8·68 | 297 | 294 | 276 | 259 | 288 |
| XIV. இரப்பர்ப் பொருட்கள்—பாதரட்சைகள் நீங்கலாக .. | 15 | 18 | 20 | 20 | 24 | 833 | 964 | 1022 | 1177 | 1304 | 232 | 264 | 293 | 377 | 361 | 1·3 | 1·5 | 1·7 | 2·3 | 1·9 | 6·8 | 8·3 | 10·9 | 13·7 | 17·0 | 5·43 | 5·63 | 5·81 | 6·10 | 5·21 | 279 | 279 | 287 | 320 | 277 |
| XV. ஒட்டுப் பலகை .. | 1 | 1 | 1 | 1 | 1 | 370 | 490 | 554 | 579 | 611 | 123 | 153 | 177 | 185 | 171 | 0·8 | 0·9 | 1·4 | 1·4 | 1·3 | 2·3 | 2·9 | 3·4 | 3·9 | 3·9 | 6·50 | 6·10 | 7·65 | 7·65 | 7·70 | 332 | 313 | 320 | 320 | 280 |
| XVI. கனிப்பொருள் மணல்கள் .. | 1 | 1 | 1 | 1 | 1 | 47 | 91 | 102 | 83 | 105 | 13 | 25 | 33 | 23 | 33 | 0·2 | 0·2 | 0·3 | 0·2 | 0·3 | — | 0·1 | 0·1 | 0·1 | 0·9 | 12·02 | 8·49 | 7·95 | 6·81 | 7·52 | 287 | 276 | 324 | 282 | 312 |
| XVII. கைத்தொழில்களுக்கான அடிப்படை இரசாயனப் பொருட்கள் | 1 | 1 | 1 | 1 | 1 | 168 | 164 | 197 | 199 | 200 | 50 | 49 | 59 | 62 | 62 | 0·4 | 0·4 | 0·5 | 0·5 | 0·6 | — | 0·2 | 1·1 | 1·2 | 1·0 | 7·40 | 7·82 | 7·60 | 7·61 | 8·06 | 297 | 297 | 301 | 311 | 310 |
| XVIII. சிமெந்தும், சிமெந்துப் பொருட்களும் .. | 2 | 2 | 2 | 2 | 3 | 1542 | 1410 | 1512 | 1541 | 1507 | 457 | 414 | 442 | 440 | 470 | 3·5 | 3·1 | 3·4 | 3·4 | 3·5 | 19·6 | 17·9 | 20·2 | 22·5 | 23·0 | 7·80 | 7·80 | 7·80 | 7·79 | 7·33 | 312 | 312 | 312 | 312 | 312 |
| மொத்தம் .. | 262 | 315 | 387 | 433 | 717 | 18,439 | 19,988 | 23,861 | 26,304 | 34,222 | 5114 | 5605 | 6620 | 7301 | 9280 | 32·4 | 35·3 | 41·8 | 46·0 | 57·4 | [illegible]13·4 | 331·7 | 388·0 | 432·4 | 538·2 | 6·22 | 6·19 | 6·31 | 6·30 | 6·19 | 277 | 280 | 277 | 278 | 271 |

மூலம்: ஸ்ரீலங்கா மகா வங்கி

அட்டவணை II (ஐ) அ—2

## கைத்தொழில் வகைகளின்படியும், பிரதான தயாரிப்புப் பொருட்களின்படியும் வகுக்கப்பட்டுள்ள கைத்தொழில் உற்பத்தியின் பெறுமானம், 1960—64

| | பெறுமானம் (பத்து இலட்சம் ரூபாய்களில்) | | | | | அவ்வத் தொழிலின் சதவீதமாக | | | | | மொத்தக் கைத்தொழில் உற்பத்தியின் சதவீதமாக | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1960 | 1961 | 1962 | 1963 | 1964 | 1960 | 1961 | 1962 | 1963 | 1964 | 1960 | 1961 | 1962 | 1963 | 9641 |
| I. பல்வேறு உணவுத் தயாரிப்புக்கள் | 144 0 | 146.9 | 147.8 | 147.6 | 160.7 | 100.0 | 100 0 | 100 0 | 100 0 | 100.0 | 46.5 | 44.3 | 38.1 | 34.2 | 29.9 |
| பண்ணைப் பொருட்கள் .. | 1.9 | 3.5 | 3.0 | 4.1 | 4 9 | 1.3 | 2.4 | 2.0 | 2.8 | 3.0 | 0.6 | 1.1 | 0.8 | 0.9 | 0.9 |
| பண்ணை உணவுகளும், பறவை உணவுகளும் . | 17.1 | 17.3 | 18.4 | 19.6 | 23.5 | 11.9 | 11.8 | 12.4 | 13.3 | 14.6 | 5.5 | 5.2 | 4.7 | 4.5 | 4.4 |
| தேங்காய்த் துருவல் .. | 13.4 | 8.8 | 11.4 | 11.0 | 13.2 | 9.3 | 6.0 | 7.7 | 7.5 | 8.2 | 4.3 | 2.7 | 2.9 | 2.5 | 2.5 |
| உணவுக்கான எண்ணெய்களும், கொழுப்புகளும் .. | 104.8 | 111.7 | 110.7 | 109.0 | 114.4 | 72.8 | 76.0 | 74.9 | 73.8 | 71.2 | 33.4 | 33.7 | 28.5 | 25.2 | 21.3 |
| உப்பு .. | 4.2 | 2.7 | 0.7 | 0.4 | 0.5 | 2.9 | 1.8 | 0.5 | 0.3 | 0.3 | 1.3 | 0.8 | 0.2 | 0.1 | 0.1 |
| ஐஸ் .. | 1.3 | 1.2 | 1.4 | 1.1 | 1.3 | 0.9 | 0.8 | 0.9 | 0.7 | 0.8 | 0.4 | 0.4 | 0.4 | 0.3 | 0.2 |
| ஏனையவை .. | 1.3 | 1.7 | 2.2 | 2.4 | 2.9 | 0.9 | 1.2 | 1.5 | 1.6 | 1.8 | 0.4 | 0.5 | 0.6 | 0.6 | 0.5 |
| II. பழுதடையாமலும், கலனிட்டு வைக்கப்பட்டதுமான பழங்களும், மரக்கறிகளும் .. | 1.3 | 1.6 | 2.3 | 3.4 | 4.5 | 100.0 | 100 0 | 100.0 | 100.0 | 100.0 | 0.4 | 0.5 | 0.6 | 0.8 | 0.8 |
| "ஜாம்", பழச்சாற்றுப் பசைகளும், மிளகாய் பட்சணங்களும் .. | 0.4 | 0.5 | 0.9 | 2.2 | 3.0 | 30.8 | 31.3 | 39.1 | 64.7 | 66.7 | 0.1 | 0.2 | 0.2 | 0.5 | 0.5 |
| ஏனையவை .. | 0.9 | 1.1 | 1.3 | 1.2 | 1.5 | 69.1 | 69.7 | 61.8 | 35.2 | 33.3 | 0.3 | 0.3 | 0.3 | 0.3 | 0.3 |
| III. விஸ்கோத்தும் இனிப்புப் பதார்த்தங்களும் .. | 11.5 | 18 2 | 21.9 | 28 8 | 30.9 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 | 100 0 | 3.7 | 5.5 | 5.6 | 6.7 | 5.7 |
| விஸ்கோத்து .. | 6.2 | 10.5 | 12.7 | 15.7 | 16.4 | 53.9 | 57.7 | 58.0 | 54.5 | 53.1 | 2.0 | 3.2 | 3.3 | 3.6 | 3.0 |
| அவித்த இனிப்புப் பதார்த்தங்கள் | 3.9 | 3.4 | 5.1 | 6.6 | 5.5 | 33.9 | 18.7 | 23.3 | 22.9 | 17.8 | 1.2 | 1.0 | 1.3 | 1.5 | 1.0 |
| சொக்களற்றும் ரொப்பியும் .. | -- | 0.7 | 1.3 | 3.1 | 5.5 | -- | 3.8 | 5.9 | 10.8 | 17.8 | — | 0.2 | 0.3 | 0.7 | 1.0 |
| ஏனையவை .. | 1.5 | 3.5 | 2.8 | 3.4 | 3.5 | 13.0 | 19.2 | 12.8 | 11.8 | 11.3 | 0.5 | 1.1 | 0.7 | 0.8 | 0.7 |
| IV. குளிர்ப்பானங்கள் .. | 8.3 | 7.8 | 10.0 | 11.4 | 13.4 | 100.0 | 100 0 | 100 0 | 100 0 | 100.0 | 2.6 | 2.4 | 2.6 | 2.6 | 2.5 |
| V. பியறும் ஸ்ரவுட்டும் .. | 3.1 | 2.4 | 2.2 | 2.4 | 2.7 | 100 0 | 100 0 | 100 0 | 100 0 | 100 0 | 1.0 | 0.7 | 0 6 | 0.6 | 0 5 |
| VI. புகையிலை .. | 30 0 | 29 0 | 35.0 | 39.0 | 46.2 | 100.0 | 100.0 | 10.00 | 100 0 | 100.0 | 9.6 | 8.7 | 9.0 | 9.0 | 8.6 |
| VII. ஆடைகள் .. | 19.4 | 19.8 | 29.3 | 38.4 | 54.9 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 | 100 0 | 6.2 | 6.0 | 7.6 | 8.9 | 10.2 |
| சேட்டுக்கள் . | 7.1 | 7.3 | 14.2 | 20.7 | 25.4 | 36.6 | 36.6 | 48.5 | 53.9 | 46.3 | 2.3 | 2.2 | 3.7 | 4.8 | 4.7 |
| ஏனையவை (பிரதானமாக பனியன்கள்) .. | 12.3 | 12.5 | 15.1 | 17.7 | 29.5 | 63.4 | 63.1 | 51.5 | 46.3 | 53.7 | 3.9 | 3.8 | 3.9 | 4.1 | 5.5 |
| VIII. பாதரட்சைகளும் தோற் பொருட்களும் .. | 8.3 | 8.5 | 19 6 | 22 3 | 23.4 | 100 0 | 100 0 | 100 0 | 100 0 | 100.0 | 2.6 | 2.6 | 5.1 | 5.2 | 4.3 |
| IX. பல்வேறு இரசாயன பொருட்கள் | 36.4 | 40.3 | 51.5 | 56 0 | 73.7 | 100.0 | 100 0 | 100.0 | 100 0 | 100 0 | 11.6 | 12.1 | 13.3 | 13.0 | 13.7 |
| மருந்துப் பொருட்கள் (கிளிசரின் உட்பட) .. | 2 2 | 2.5 | 1.9 | 4.2 | 5.2 | 6.0 | 6.2 | 3.7 | 7.5 | 7.1 | 0.7 | 0.8 | 0.5 | 1.0 | 1.0 |
| அழகு சாதனங்கள் .. | 1.6 | 1.7 | 3.5 | 5.6 | 6.2 | 4.4 | 4.2 | 6.8 | 10.0 | 8.4 | 0.5 | 0.5 | 0.9 | 1.3 | 1.2 |
| சவுக்காரமும், சுத்திகரப் பொருட்களும் . | 26.9 | 28.1 | 35.1 | 34.0 | 39.0 | 73.9 | 69.7 | 68.2 | 60.7 | 52.9 | 8.6 | 8.5 | 9.0 | 7.9 | 7.2 |
| தீப்பெட்டிகள் .. | 3.0 | 3.8 | 5.6 | 4.5 | 10.3 | 8.2 | 9.4 | 10.9 | 8.0 | 14.0 | 1.0 | 1.1 | 1.4 | 1.0 | 1.9 |
| பற்பொடிகள் .. | 1.1 | 2.2 | 2.2 | 2.9 | 3.3 | 3.0 | 5.5 | 4.3 | 5.2 | 4.5 | 0.4 | 0.7 | 0.6 | 0.7 | 0.6 |
| ஏனையவை .. | 1.7 | 2.0 | 3.2 | 4.8 | 9.7 | 4.7 | 5.0 | 6.2 | 8.6 | 13.2 | 0.5 | 0.6 | 0.8 | 1.1 | 1.8 |
| X. காகிதப் பொருட்களும் காகித மட்டையிலான பொருட்களும் | 12.5 | 13 9 | 15.4 | 18.2 | 30.1 | 100.0 | 100 0 | 100.0 | 100 0 | 100.0 | 3.8 | 4.2 | 4.0 | 4.2 | 5.6 |
| (எழுத்து வேலைக்கான காகிதம் பரீட்சைப் புத்தகங்கள் போன்றவை உட்பட) .. | 4.8 | 5.1 | 6.8 | 8.9 | 12.1 | 38.4 | 36.7 | 44.2 | 48.9 | 40.2 | 1.5 | 1.5 | 1.8 | 2.1 | 2.2 |
| அச்சு வேலைக்கான காகிதம் .. | 4.5 | 5.9 | 4.2 | 3.1 | 3.9 | 36 0 | 42.4 | 27.3 | 17.0 | 13.0 | 1.4 | 1.8 | 1.1 | 0.7 | 0.7 |
| காகிதச் சுருள்கள் .. | 0.1 | 0.5 | 0.7 | 1.7 | 4.6 | 0.8 | 3.6 | 4.5 | 9.3 | 15.3 | ... | 0.2 | 0.2 | 0.4 | 0.9 |
| சுற்றுறைக் காகிதம் .. | 0.7 | 0.5 | 0.5 | 1.2 | 2.3 | 5.6 | 3.6 | 3.2 | 6.6 | 7.6 | 0.2 | 0.2 | 0.1 | 0.3 | 0.4 |
| ஏனையவை .. | 2.4 | 1.9 | 3.2 | 3.3 | 7.2 | 19.7 | 13.7 | 20.8 | 18.1 | 23.9 | 0.8 | 0.6 | 0.8 | 0.8 | 1.3 |
| XI. உலோகப் பொருட்கள் .. | 7.4 | 9.1 | 11.2 | 15.1 | 38.5 | 100.0 | 100.0 | 100.0 | 100 0 | 100 0 | 2.4 | 2.7 | 2.9 | 3.5 | 7.2 |
| அலுமினியப் பொருட்கள் .. | 3.0 | 4.5 | 5.3 | 7.3 | 9.2 | 40.5 | 49.5 | 47.3 | 48.3 | 23.9 | 1.0 | 1.4 | 1.4 | 1.7 | 1.7 |
| உலோகப் பொருட்களிலான கலன்கள் .. | 1.4 | 1.5 | 2.7 | 2.1 | 4.9 | 18.9 | 16.5 | 24.1 | 13.9 | 12.7 | 0.4 | 0.5 | 0.7 | 0.5 | 0.9 |
| முள்ளுக்கம்பி வடங்கள் .. | 0.1 | 0.2 | 0.7 | 1.1 | 3.0 | 1.4 | 2.3 | 6.3 | 7.3 | 7.8 | ... | 0.1 | 0.2 | 0.3 | 0.6 |
| கம்பி ஆணிகள் .. | 1.4 | 1.8 | 1.8 | 2.7 | 3.9 | 18.9 | 19.8 | 16.1 | 17.9 | 10.1 | 0.4 | 0.5 | 0.5 | 0.6 | 0.7 |
| ஏனையவை .. | 1.5 | 1.1 | 0.7 | 1.9 | 17.5 | 20.3 | 12.1 | 6.3 | 12.6 | 45.5 | 0.5 | 0.3 | 0.2 | 0.4 | 3.3 |
| XII. தயாரிக்கப்பட்ட பொருட்கள் (முன்பு சேர்க்கப்படாதவைகள்) | 1.5 | 3 7 | 4.3 | 5.8 | 11.0 | 100.0 | 100.0 | 100 0 | 100.0 | 100 0 | 0.5 | 1.1 | 1.1 | 1.3 | 2.0 |
| பிளாஸ்ரிக் பொருட்கள் .. | 0.7 | 2.0 | 2.5 | 3.1 | 5.8 | 46.7 | 54.1 | 58.1 | 53.4 | 52.7 | 0.2 | 0.6 | 0.6 | 0.7 | 1.1 |
| ஏனையவை .. | 0.9 | 1.5 | 1.8 | 2.7 | 5.2 | 60.0 | 40.5 | 41.9 | 46.6 | 47.3 | 0.3 | 0.5 | 0.5 | 0.6 | 1.0 |
| XIII. பீங்கான் பொருட்கள் .. | 1 0 | 1.1 | 1.9 | 2.5 | 2.4 | 100 0 | 100 0 | 100.0 | 100 0 | 100.0 | 0.3 | 0.3 | 0.5 | 0 6 | 0.4 |
| XIV. இரப்பர் பொருட்கள்—பாதரட்சைகள் நீங்கலாக .. | 6.8 | 8.3 | 10.9 | 13.7 | 17.0 | 100.0 | 100 0 | 100.0 | 100 0 | 100.0 | 2.2 | 2.5 | 2.8 | 3.2 | 3.2 |
| ரயர்களுக்கு கோடுகள்அமைத்தல் | 4.4 | 5.3 | 6.8 | 9.1 | 11.0 | 64.7 | 63.9 | 62.4 | 66.4 | 64.7 | 1.4 | 1.6 | 1.8 | 2.1 | 2.0 |
| துவிச்சக்கர வண்டிகளுக்கான ரயர்களும், ரியூப்களும் .. | 1.2 | 1.7 | 2.6 | 2.7 | 4.2 | 17.6 | 20.5 | 23.9 | 19.7 | 24.7 | 0.4 | 0.5 | 0.7 | 0.6 | 0.8 |
| ஏனையவை .. | 1.2 | 1.3 | 1.5 | 2.0 | 1.8 | 17.6 | 15.7 | 13.8 | 14.6 | 10.6 | 0.4 | 0.4 | 0.4 | 0.5 | 0.3 |
| XV. ஒட்டுப் பலகை .. | 2 3 | 2.9 | 3.4 | 3.9 | 3.9 | 100.0 | 100.0 | 100.0 | 100 0 | 100.0 | 0.7 | 0.9 | 0.9 | 0.9 | 0.7 |
| XVI. கனிப்பொருள் மணல்கள் .. | — | 0.1 | 0.1 | 0.1 | 0.9 | — | 100 0 | 100.0 | 100.0 | 100.0 | — | ... | ... | ... | 0.2 |
| XVII. கைத்தொழில்களுக்கான அடிப்படை இரசாயனப் பொருட்கள் .. | — | 0 2 | 1.1 | 1.2 | 1.0 | — | 100 0 | 100.0 | 100.0 | 100.0 | — | 0.1 | 0.3 | 0.3 | 0.2 |
| XVIII. சிமெந்தும், சிமெந்துப் பொருட்களும் .. | 19.6 | 17.9 | 20.2 | 22.5 | 23.0 | 100 0 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 | 6.3 | 5.4 | 5.2 | 5.2 | 4.3 |
| மொத்தம் (I–XVIII) .. | 313 4 | 331.7 | 388.0 | 432 0 | 538.2 | | | | | | 100.0 | 100.0 | 100 0 | 100.0 | 0'001 |

மூலம்: ஸ்ரீலங்கா மகா வங்கி

கைத்தொழில், அதன் உற்பத்திப் பெறுமான அதிகரிப்போடு ஒப்பிட்டுப் பார்க்கையில் சிறிதளவிலேயே வேலைச் சந்தர்ப்பங்களை ஏற்படுத்தியது. ஆடைக் கைத்தொழிலின் ஊழியர்களின் சராசரி எண்ணிக்கை கூடியபொழுதும், ஒரு வேலையாளுக்கான வேலை செய்யப்பட்ட ஆள்வேலை நாட்களின் வேலை நிலைத் தொகுதி 1964ம் ஆண்டில் வீழ்ச்சியுற்றது மட்டுமன்றி, இது எல்லாக் கைத்தொழில்களிலும் பார்க்க மிகக் குறைவாகவும் விளங்கியது. இதற்கு இரு சந்தர்ப்பங்கள் காரணமாகும். முதலாவதாக, 1964ம் ஆண்டில் பல புதிய தொழில் நிலையங்கள் இக் கைத்தொழிலில் சேர்ந்தமையும், இவை ஒரு ஆண்டுப் பகுதியில் மாத்திரமே இயங்கியமையுமாகும். இரண்டாவதாக, நிதானமான அளவில் வேலை இல்லாத பல சிறு தொழில் நிலையங்கள் இருந்தமையுமாகும்.

மூன்றும் அட்டவணையில் கொடுக்கப்பட்டபடி. பிரதான பொருளாதாரத் தொகுதிகளின் அடிப்படையான கைத்தொழில் உற்பத்தியின் பகுப்பை, 1963ம் ஆண்டுடன் ஒப்பு நோக்கும்பொழுது நுகர்ச்சிப் பொருட்கள், நடுத்தரமான பொருட்கள், முதலீட்டப் பொருட்கள் ஆகியவற்றின் முக்கியத்துவத்தில் மாற்றம் அவ்வளவாகக் காணப்படவில்லை. நுகர்ச்சிப் பொருட்களினளவு சிறிதளவும் மாற்றமுறாதிருக்க, (இவை கைத்தொழில் உற்பத்திப் பெறுமானத்தில் 63 சதவீதத்தை உள்ளடக்குவனவாம்) நடுத்தரமான பொருட் பகுதியிலிருந்து முதலீட்டப் பொருட்களுக்கு ஒரு சிறு மாற்றம் ஏற்பட்டது.

தயாரிக்கப்பட்ட நுகர்ச்சிப் பொருட் பகுதியில், பாதரட்சைகள், தோற் பொருட்களிலும், விஸ்கோத்து இனிப்புப் பதார்த்தங்களிலும் சிறிதளவு விரிவோ அன்றி ஒரு விரிவும் ஏற்படாமலிருந்தது. சந்தைத் தடைபாடுகள் இவற்றின் கூடிய வளர்ச்சியைத் தடைபண்ணியிருப்பதாகத் தெரிகின்றது. இனிப்புப் பதார்த்தக் கைத்தொழிலின் உற்பத்து அமைப்பில் புரியத்தக்க மாற்றமேற்பட்டது. இம்மாற்றம், இனிப்புகளின் உற்பத்தி வீழ்ச்சியையும் சாக்கலேட்டுகள், ரொப்பிகளது உற்பத்தி உயர்வையும் கொண்டதாம். இனிப்பு உற்பத்தி இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களில் முழுவதும் தங்கியிருப்பதால், இவ்வுற்பத்தி குறைந்தும், பொருட்களின் முழுப் பெறுமானத்தில் 50 சதவீதம் உள்ளூர்உற்பத்திப் பொருட்களைப் பாவிக்கும் சாக்கலேட்டு ரொப்பி உற்பத்தி அதிகரித்தும் வந்தது.

புகையிலை, ஆடை, பல்வேறு இரசாயனப் பொருட்கள், காகிதமும், காகித மட்டைகளும், போன்ற வேறு பல கைத்தொழில்கள் பெறுமானத்தில் அதிகரித்துக் கொண்டு போயின. இவ்வதிகரிப்பில் முக்கிய பாகம் முன்பிருந்ததைப் பார்க்கிலும் விலங்குத் தீனும், தேங்காயெண்ணெயும், புகையிலை, ஆடைகள், சவுக்காரம், சாந்து பூச்சி கொல்லி, மினுக்கி நிறப்பூச்சு, வானிசு, ஊதுவத்திகள், கற்பூரம், பற்பொடி, எழுத்து வேலைக்கான காகிதம், பயிற்சி வேலைக்கான புத்தகங்கள் போன்ற பலதரப்பட்ட தனிப் பொருட்களிலும் பரவியது.

ஆடைக் கைத்தொழிலிலும், காகிதமும் காகித மட்டைத் தொழிலிலும், ஆண்டு உற்பத்தியின் மொத்தப் பெறுமான எண்கள் உண்மை உற்பத்தி உயர்வை மிகைப்படுத்துவனவாம். சில ஆடைக் கைத்தொழில் முயற்சிகளின் முன்னைய ஆண்டுகளில் சேர்க்கப்படாத இவ்வாண்டின் அட்டவணையில் சேர்க்கப்பட்டமையே, மேற்குறிப்பிட்டபடி, அட்டவணையில் ஆடைக் கைத்தொழிற் பெறுமான அதிகரிப்பின் ஒரு பகுதிக்குக் காரணமாகும். மறுபுறம், காகிதத்திலும், காகிதமட்டைத் தொழிலிலும், கிழக்குப் பகுதிக் காகிதக் கூட்டுத்தாபனத்தால் தயாரிக்கப்பட்ட எழுத்து வேலைக்கான காகிதம், சுற்றுறைப் பெட்டிக் காகிதம் கிராப்ட் காகிதத்தை மற்

அட்டவணை II (ஐ) அ—3

## கைத்தொழில் உற்பத்தியின் பெறுமானம், 1960—64
## பிரதான பொருளாதாரப் பாகுபாடுகளின்படி

| | பத்து இலட்சம் ரூபாய்களில் | | | | | சதவீதம் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1960 | 1961 | 1962 | 1963 | 1964 | 1960 | 1961 | 1962 | 1963 | 1964 |
| **அ. நுகர்ச்சிப்பொருட்கள்** | **170·3** | **186·6** | **236·1** | **275·1** | **340·8** | **54·3** | **56·3** | **60·8** | **63·7** | **63·3** |
| உணவும் குடிவகையும், புகையிலையும் | 87·8 | 94·8 | 105·0 | 119·1 | 133·7 | 28·0 | 28·6 | 27·1 | 27·6 | 24·8 |
| பல்வேறு உணவுத் தயாரிப்புகள் (1) | 33·6 | 35·8 | 33·6 | 34·1 | 36·0 | 10·7 | 10·8 | 8·7 | 7·9 | 6·7 |
| பழுதடையாமலும், கலனிட்டு வைக்கப்பட்டுள்ளதுமான பழங்களும், மரக்கறிகளும் (2) | 1·3 | 1·6 | 2·3 | 3·4 | 4·5 | 0·4 | 0·5 | 0·6 | 0·8 | 0·8 |
| விஸ்கோத்தும், இனிப்புப் பதார்த்தங்களும் | 11·5 | 18·2 | 21·9 | 28·8 | 30·9 | 3·7 | 5·5 | 5·6 | 6·7 | 5·7 |
| வாயுப்பானங்கள் | 8·3 | 7·8 | 10·0 | 11·4 | 13·4 | 2·6 | 2·4 | 2·6 | 2·6 | 2·5 |
| பியரும் ஸ்ரவுட்டும் | 3·1 | 2·4 | 2·2 | 2·4 | 2·7 | 1·0 | 0·7 | 0·6 | 0·6 | 0·5 |
| புகையிலை | 30·0 | 29·0 | 35·0 | 39·0 | 46·2 | 9·6 | 8·7 | 9·0 | 9·0 | 8·6 |
| ஆடைகள் (3) | 19·4 | 19·8 | 29·3 | 38·4 | 54·9 | 6·2 | 6·0 | 7·5 | 8·9 | 10·2 |
| பாதரட்சைகளும் தோற்பொருட்களும் | 8·3 | 8·5 | 19·6 | 22·3 | 23·4 | 2·6 | 2·6 | 5·0 | 5·2 | 4·3 |
| பல்வேறு இரசாயனப் பொருட்கள் (4) | 36·4 | 40·3 | 51·5 | 56·0 | 73·7 | 11·6 | 12·1 | 13·3 | 13·0 | 13·7 |
| காகிதப் பொருட்களும் காகித மட்டைப் பொருட்களும் (5) | 7·2 | 7·0 | 10·0 | 12·2 | 19·2 | 2·3 | 2·1 | 2·6 | 2·8 | 3·6 |
| உலோகப் பொருட்கள் (6) | 3·0 | 4·5 | 5·3 | 7·3 | 9·2 | 1·0 | 1·4 | 1·4 | 1·7 | 1·7 |
| தயாரிக்கப்பட்ட பொருட்கள் (மு சே.ப.) (7) | 1·5 | 3·7 | 4·3 | 5·8 | 11·0 | 0·5 | 1·1 | 1·1 | 1·3 | 2·0 |
| பீங்கான் பொருட்கள் | 1·0 | 1·1 | 1·9 | 2·5 | 2·4 | 0·3 | 0·3 | 0·5 | 0·6 | 0·4 |
| இரப்பர் பொருட்கள் (8) | 5·7 | 6·9 | 9·2 | 11·5 | 13·3 | 1·8 | 2·1 | 2·4 | 2·7 | 2·5 |
| **ஆ. நடுத்தரமான பொருட்கள்** | **119·4** | **122·7** | **126·9** | **126·8** | **146·3** | **38·0** | **37·0** | **32·7** | **29·3** | **27·2** |
| பல்வேறு உணவுத் தயாரிப்புக்கள் (9) | 110·4 | 111·1 | 114·2 | 113·5 | 124·7 | 35·2 | 33·5 | 29·4 | 26·2 | 23·2 |
| உலோகப் பொருட்கள் 10 | 1·4 | 1·5 | 2·7 | 2·1 | 4·9 | 0·4 | 0·4 | 0·7 | 0·5 | 0·9 |
| காகிதப் பொருட்களும், காகித மட்டைப் பொருட்களும் (11) | 5·3 | 6·9 | 5·4 | 6·0 | 10·9 | 1·7 | 2·1 | 1·4 | 1·4 | 2·0 |
| ஒட்டுப்பலகை | 2·3 | 2·9 | 3·4 | 3·9 | 3·9 | 0·7 | 0·9 | 0·9 | 0·9 | 0·7 |
| கனிப்பொருள் மணல்கள் | — | 0·1 | 0·1 | 0·1 | 0·9 | — | ... | ... | ... | 0·2 |
| கைத்தொழில்களுக்கான அடிப்படை இரசாயனப் பொருட்கள் (12) | — | 0·2 | 1·1 | 1·2 | 1·0 | — | 0·1 | 0·3 | 0·3 | 0·2 |
| **இ. முதலீட்டுப் பொருட்கள்** | **23·7** | **22·4** | **25·1** | **30·4** | **51·1** | **7·7** | **6·7** | **6·5** | **7·0** | **9·5** |
| உலோகப் பொருட்கள் (13) | 3·0 | 3·1 | 3·2 | 5·7 | 24·4 | 1·0 | 0·9 | 0·8 | 1·3 | 4·5 |
| இரப்பர் பொருட்கள் (14) | 1·1 | 1·4 | 1·7 | 2·2 | 3·7 | 0·4 | 0·4 | 0·4 | 0·5 | 0·7 |
| சிமெந்தும், சிமெந்துப் பொருட்களும் | 19·6 | 17·9 | 20·2 | 22·5 | 23·0 | 6·3 | 5·4 | 5·2 | 5·2 | 4·3 |
| மொத்தம் | **313·4** | **331·7** | **388·0** | **432·0** | **538·2** | **100·0** | **100·0** | **100·0** | **100·0** | **100·0** |

மூலம் ஸ்ரீலங்கா மகா வங்கி

குறிப்புகள்:—

1. பாற்பண்ணைப் பொருட்கள் (ஐஸ்கிறீம் உட்பட), உட்கொள்ளக்கூடிய எண்ணெய்கள், கொழுப்புகள் முதலியன.
2. பழக்குழம்புகள், "ஜெலிகள்", சுவைக்கூட்டுகள், பழங்களிலிருந்து செய்த திம்பானங்கள் முதலியன.
3. சேட்டுகள் பனியன்கள் முதலியன.
4. மருந்துப் பொருட்கள், வண்ணப்பொருட்கள், சவர்க்காரங்கள், சுத்திகரிக்கும் பொருட்கள், தீக்குச்சிகள், பற்பசை முதலியன.
5. எழுதும் தாள் பயிற்சிப்புத்தகங்கள் முதலியன.
6. அலுமினியக்கலங்கள்.
7. பிளாஸ்டிக் பொருட்கள் முதலியன.
8. ரயர்களுக்குக் கோடமைத்தல், சயிக்கிள் ரயர்களும், ரியூப்களும், விளையாட்டுப் பொருட்களும் வீட்டுத் தேவைக்கான பொருட்களும்.
9. பாற்பண்ணைப் பொருட்கள், கோழிப்பண்ணைப் பொருட்கள், எண்ணெய்கள், கொழுப்புகள், ஐஸ், தேங்காய்த்துருவல் முதலியன.
10. கலங்கள்.
11. அச்சடித்தற் காகிதமும், காகிதச் சுருள்களும், ஏனைய சுற்றுறைப் பெட்டிகளும், சுற்றுறைக் காகிதமும்.
12. எரிசோடாவும், குளோரினும்.
13. முட்கம்பி, கம்பி ஆணிகள், நாகம் பூசிய பொருட்கள், முதலியன.
14. ரயர்களுக்குக் கோடமைத்தல்.

## அட்டவணை II (ஐ) அ—4

# அளவு அமைப்பின்படி, 1964ம் ஆண்டில் உற்பத்தி செய்யும் தொழில் நிலையங்கள் உற்பத்திப் பெறுமானத்தின் அடிப்படையில்

| | | உற்பத்திப் பெறுமானம் | | | |
|---|---|---|---|---|---|
| | | 250,000ரூபாய்களுக் குக் கீழ்ப்பட்டவை | 250,000ரூபாய்களுக்கு மேற்பட்ட வையும், 20 இலட்சம்ரூபாய்களுக் குக் கீழ்ப்பட்டவையும் | 20 இலட்சம் ரூபாய்க ளுக்கு மேற்பட்டவை | மொத்தம் |
| I. பல்வேறு உணவுத் தயாரிப்புகள் | தொழில் நிலையங்களின் எண்ணிக்கை உற்பத்தியிற் சதவீதமாக | கிடைக்கவில்லை | | | |
| II. பழுதடையாமலும் கலனிட்டு வைக்கப்பட்டுள்ளதுமான பழங்களும், மரக்கறிகளும் .. | ,, | 25<br>16·9 | 7<br>83·1 | —<br>— | 32<br>100.0 |
| III. விஸ்கோத்தும் இனிப்புப் பதார்த்தங்களும் .. | ,, | 59<br>12·4 | 21<br>40·7 | 2<br>46·9 | 82<br>100.0 |
| IV. வாயுப் பானங்கள் .. | ,, | 27<br>10·4 | 4<br>20·7 | 2<br>68·9 | 33<br>100.0 |
| V. பியரும், ஸ்ரவுட்டும் .. | ,, | —<br>— | —<br>— | 1<br>100.0 | 1<br>100 0 |
| VI. புகையிலை .. | ,, | 10<br>1·9 | 11<br>19·7 | 2<br>78·4 | 23<br>100.0 |
| VII. ஆடைகள் .. | ,, | 73<br>9·9 | 23<br>29·3 | 7<br>60·8 | 103<br>100.0 |
| VIII. பாதரட்சைகளும், தோற் பொருட்களும் .. | ,, | 28<br>6·2 | 6<br>19·0 | 2<br>74·8 | 36<br>100.0 |
| IX. பல்வேறு இரசாயணப் பொருட்கள் .. | ,, | 70<br>6·4 | 20<br>22·9 | 6<br>70·7 | 96<br>100.0 |
| X. காகிதப் பொருட்களும் காகித மட்டைப் பொருட்களும் .. | ,, | 35<br>10·6 | 19<br>39·8 | 3<br>49·6 | 57<br>100 0 |
| XI. உலோகப் பொருட்கள் .. | ,, | 64<br>12·6 | 23<br>43·6 | 5<br>43·8 | 92<br>100.0 |
| XII. தயாரிக்கப்பட்ட பொருட்கள் (முன்பு சேர்க்கப்படாதவைகள்) | ,, | 59<br>41·9 | 10<br>58·1 | —<br>— | 69<br>100.0 |
| XIII. பீங்கான் பொருட்கள் .. | ,, | —<br>— | —<br>— | 1<br>100.0 | 1<br>100.0 |
| XIV. இரப்பர் பொருட்கள்—பாதரட்சைகள் நீங்கலாக .. | ,, | 12<br>8·8 | 9<br>26·9 | 3<br>64·3 | 24<br>100.0 |
| XV. ஒட்டுப் பலகை .. | ,, | —<br>— | —<br>— | 1<br>100.0 | 1<br>100.0 |
| XVI. கனிப்பொருள் மணல்கள் .. | ,, | —<br>— | 1<br>100 | —<br>— | 1<br>100.0 |
| XVII. கைத்தொழில்களுக்கான அடிப்படை இரசாயணப் பொருட்கள் | ,, | —<br>— | 1<br>100 | —<br>— | 1<br>100.0 |
| XVIII. சிமெந்தும், சிமெந்துப் பொருட்களும் .. | ,, | 1<br>0·3 | —<br>— | 2<br>99·7 | 3<br>100.0 |
| மொத்தம் .. | | 463<br>8·7 | 155<br>28·4 | 37<br>62·9 | 655<br>100.0 |

மூலம்: ஸ்ரீலங்கா மகாவங்கி.

அட்டவணை II (ஐ) அ—5

## அளவு அமைப்பின்படி, 1663ம் ஆண்டில் உற்பத்தி செய்யும் தொழில் நிலையங்கள் கூலிச் செலவின் அடிப்படையில்

| | | 15,000 ரூபாய்களுக்குக் கீழ்ப்பட்டவை | 15,000 ரூபாய்களுக்குக் மேற்பட்டவையும், 500,000 ரூபாய்களுக்குக் கீழ்ப்பட்டவையும் | 50,000 ரூபாய்களுக்கு மேற்பட்டவையும் 500,000 ரூபாய்களுக்குக் கீழ்ப்பட்டவையும் | 500,000 ரூபாய்களுக்கு மேற்பட்டவை | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| I. பல்வேறு உணவுத் தயாரிப்புகள் .. | தொழில் நிலையங்களின் எண்ணிக்கை கூலிச் செலவின் சதவீதமாக | | | கிடைக்கவில்லை | | |
| II. பதனிடையாமலும், கலனிட்டு வைக்கப்பட்டுள்ளதுமான பழங்களும், மரக்கறிகளும் .. | | 22 | 8 | 2 | — | 32 |
| | ,, | 16·3 | 49·6 | 34·1 | — | 100·0 |
| III. விஸ்கோத்தும் இனிப்புப் பதார்த்தங்களும் .. | | 52 | 21 | 8 | 1 | 82 |
| | ,, | 10·8 | 21·6 | 28·8 | 38·8 | 100·0 |
| IV. வாயுப் பானங்கள் .. | | 22 | 5 | 5 | 1 | 33 |
| | ,, | 4·0 | 3·5 | 37·7 | 54·8 | 100·0 |
| V. பியரும், ஸ்ரவுட்டும் .. | | — | — | 1 | — | 1 |
| | ,, | — | — | 100·0 | — | 100·0 |
| VI புகையிலை .. | ,, | | | கிடைக்கவில்லை | | |
| VII. ஆடைகள் .. | | 57 | 26 | 16 | 4 | 103 |
| | ,, | 4·8 | 10·1 | 31·6 | 53·5 | 100·0 |
| VIII. பாதரட்சைகளும், தோற்பொருட்களும் .. | | 23 | 5 | 5 | 2 | 35 |
| | ,, | 2·6 | 3·7 | 17·4 | 76·3 | 100·0 |
| IX. பல்வேறு இரசாயனப் பொருட்கள் .. | | 55 | 22 | 17 | 2 | 96 |
| | ,, | 4·3 | 9·5 | 38·0 | 48·2 | 100·0 |
| X. காகிதப் பொருட்களும் காகித மட்டைப் பொருட்களும் .. | | 24 | 24 | 7 | 2 | 57 |
| | ,, | 5·1 | 20·0 | 20·8 | 54·1 | 100·0 |
| XI. உலோகப் பொருட்கள் .. | | 38 | 29 | 25 | — | 92 |
| | ,, | 5·6 | 18·9 | 75·5 | — | 100·0 |
| XII. தயாரிக்கப்பட்ட பொருட்கள் (முன்பு சேர்க்கப்படாதவைகள்) .. | | 38 | 26 | 5 | — | 69 |
| | ,, | 19·7 | 53·2 | 27·1 | — | 100·0 |
| XIII. பீங்கான் பொருட்கள் .. | | — | — | — | 1 | 1 |
| | ,, | — | — | — | 100.0 | 100·0 |
| XIV. இரப்பர் பொருட்கள்—பாதரட்சைகள் நீங்கலாக .. | | 5 | 9 | 10 | — | 24 |
| | ,, | 1·6 | 12·5 | 85·9 | — | 100·0 |
| XV. ஒட்டுப் பலகை .. | | — | — | — | 1 | 1 |
| | ,, | — | — | — | 100.0 | 100·0 |
| XVI. கனிப் பொருள் மணல்கள் .. | | — | — | 1 | — | 1 |
| | ,, | — | — | 100.0 | — | 100·0 |
| XVII. கைத்தொழில்களுக்கான அடிப்படை இரசாயனப் பொருட்கள் .. | | — | — | — | 1 | 1 |
| | ,, | — | — | — | 100.0 | 100·0 |
| XVIII சிமெந்தும், சிமெந்துப் பொருட்களும் .. | | 1 | — | — | 2 | 3 |
| | ,, | 0·3 | — | — | 99·7 | 100·0 |
| மொத்தம் .. | | 337 | 175 | 102 | 17 | 631 |
| | ,, | 4·3 | 11·0 | 34·9 | 49·8 | 100·0 |

மூலம்; ஸ்ரீலங்கா மகாவங்கி

றைய தொழில் நிலையங்கள் பயிற்சி வேலைக்கான புத்தகங்கள், கடிதவுறைகள் கோவை உறைகள், சுற்றுறைப் பெட்டிகள் தயாரிப்பதற்கு உபயோகிப்பதால் இவற்றை இருதரம் எண்ணும் அம்சம் காணப்படுகின்றது. இது, இக்கைத்தொழிலில் பெறுமானத்தைக் கூட்டிக் காட்டும் தன்மைக்குக் காரணமாகும்.

1960ம், 1963ம் ஆண்டுகளுக்கிடையில் ஏற்பட்ட உலோகப் பொருட் கைத் தொழிலின் நிதானமான விரிவைத் தொடர்ந்து, 1964ம் ஆண்டு இக்கைத்தொழிலில் அபாரமான துரித வளர்ச்சி ஏற்பட்டது. 1963ம் ஆண்டு 151 இலட்சம் ரூபாக்களாக விளங்கிய உற்பத்திப் பெறுமானத்தை 1964ம் ஆண்டுடன் ஒப்பிட்டு நோக்கும் பொழுது, இது 385 இலட்சம் ரூபாக்களாக விளங்கியது. இவ்விரிவின் மிகக் கூடிய பகுதி, நுகர்ச்சிப் பொருட்கள், நடுத்தரமான பொருட்களிலும் (அலுமீனியப் பாத்திரங்கள் உலோகப் பொருட்களினால் செய்யப்பட்ட கலங்கள்) பார்க்க முதலீட்டப் பொருட் பகுதியிலேயாகும். (வேலி, முட்கம்பி, முட்கம்பி வடங்களும், கம்பி ஆணிகளும், நாகம் பூசிய வடங்களும்) வேலி முட்கம்பி, முட்கம்பி வடங்கள், உலோகப் பொருட்களினால் செய்யப்பட்ட வடங்கள் ஆகியவற்றின் அதிக உற்பத்தி அதிகரிப்பு 1964ம் ஆண்டில் 25 இலட்சம் ரூபாக்களால் இறக்குமதிச் செலவைக் குறைத்தது.

இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள், உலோகப் பொருட் கைத்தொழிலின் அடிப்படையாக விளங்குவதாலும், இவற்றின் பெறுமானம் வழமையான உற்பத்திச் செலவில் மிகக் கூடியளவு பங்கை வகிக்கின்றது. இதன் காரணமாகச் செலாவணிச் செலவில் உள்நாட்டுற்பத்தி காரணமாக ஏற்படும் சேமிப்பு மிகக் குறைவே. 1964ம் ஆண்டு, இத்தொழிலின் 371 ஆயிரம் ரூபாக்கள் முழுச் சம்பளச் சீட்டுடன் ஒப்பிட்டு நோக்கும் பொழுது, இக்கைத்தொழில்நிலையங்கள் உபயோகித்த இறக்குமதி செய்யப்பட்ட மூலப் பொருட்களின் செலவுத் தொகை 48 இலட்சம் ரூபாக்களாகும். எனினும் உள்நாட்டு உற்பத்தி இரு வழிகளில் நன்மை பயக்கின்றது. சுற்றுறைக்கும், போக்குவரத்திற்கும், எண்ணெய் சேகரிப்பதற்கும் உபயோகிக்கப்படும் குடைந்த அலுமீனியப் பாத்திரங்கள், உலோகப் பொருட்களினால் செய்யப்பட்ட கலங்கள் போன்ற இடம் பிடிக்கும் பொருட்களின் உற்பத்தி, இறக்குமதி செய்யப்பட்ட உலோகத் தகடுகளையே ஆதாரமாகவுள்ளதாயினும், இவற்றின் தற்போதைய உள்நாட்டுற்பத்தியினால் கப்பற் கூலியில் சேமிக்கக் கூடியதாயிருக்கின்றது. முட்கம்பி வடங்கள், கம்பி ஆணிகள், நாதாங்கிகள், சவர அலகுகள் (பிளேட்டுக்கள்) போன்ற மற்றைய பொருட்களைப் பொறுத்த மட்டில் இறக்குமதித் தடைப்பாடுகளைத் தொடர்ந்து, உள்ளூர் விற்பனை விலைகள் உயர்ந்தமையால், இவற்றின் உற்பத்தி இலாபகரமாயிருந்தது. உலோகப் பொருட்களினால் செய்யப்பட்ட கலங்களின் உற்பத்தி குறிப்பிடத்தக்களவு அதிகரித்தது. எனினும் பல தொழில் நிலையங்களால் அலங்காரப் பொருட்கள், இனிப்புப் பதார்த்தங்கள், பதப்படுத்தப்பட்ட பழவகை ஆகியவற்றின் விற்பனைக்கு உபயோகிக்கப்படும் கலங்கள் அளவிலும், வடிவத்திலும் வேறுபடுவனவாகையால் உள்ளூர் உற்பத்தியில் ஏற்படக்கூடிய பெருந் திட்டச் சிக்கனங்களுக்கு அது தடையாய் அமைந்தது.

## (ஐ) 1964ம் ஆண்டில் அரசாங்கத் துறைக் கைத்தொழில்கள்

கீழே தொடரும் அட்டவணை II (I) ஆ—1, 1962-1964 காலப் பகுதிக்குரிய அரசாங்கக் கூட்டுத் தாபனங்களின் உற்பத்தியைத் தருவதாம்:

அட்டவணை II (ஐ) ஆ—1

### 10 அரசாங்கக் கைத்தொழிற் கூட்டுத்தாபனங்களின் உற்பத்தி 1962—64

| கூட்டுத்தாபனத்தின் பெயர் | உற்பத்தி அலகு | 1963ம் ஆண்டின் உற்பத்தி | 1963ம் ஆண்டின் உற்பத்தி | 1964ம் ஆண்டின் உற்பத்தி |
|---|---|---|---|---|
| இலங்கைச் சீமெந்து கூட்டுத்தாபனம் .. | தொன்கள் .. | 85,700 | 76,764 | 79,500 |
| தேசிய நெசவுக் கூட்டுத்தாபனம் .. | இரு, பருத்தி நூல் | 11,46,745 | 19,56,976 | 21,84,559 |
| இலங்கைச் சீனிக் கூட்டுத்தாபனம் .. | தொன்கள் .. | 1,044 | 1,467 | 1,958 |
| கிழக்குப் பகுதிக் காகிதக் கூட்டுத்தாபனம் .. | தொன்கள் .. | 4,690 | 5,340 | 6,541 |
| பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம் .. | தொன்கள் அழுக்குச் சோடா | 915 | 985 | 895 |
| | தொன்கள் குளோறின் .. | 217 | 270 | 230 |
| இலங்கை எண்ணை, கொழுப்புக் கூட்டுத்தாபனம் .. | தொன்கள் தேங்காயெண்ணெய் .. | 13,163 | 9,467 | 1,961 |
| | தொன்கள் தேங்காய்த்தீன், மிருககோழித் தீன் .. | 20,321 | 19,305 | 21,565 |
| இலங்கைப் பீங்கான் பொருட் கூட்டுத்தாபனம் .. | தொன்கள் பீங்கான் கலங்கள் .. | 687 | 770 | 888 |
| இலங்கை கனிப்பொருட் கூட்டுத்தாபனம் .. | தொன்கள் கனிப்பொருள் மணல் | 3,383 | 5,020 | 45,503 |
| இலங்கைத் தோல் கூட்டுத்தாபனம் .. | சதுர அடி குரோம் தோல் .. | 5,11,000 | 5,00,100 | 5,11,310 |
| | இரு, ஏனையதோற் பொருட்கள் .. | 1,99,000 | 2,15,400 | 2,16,900 |
| | சோடிகள்-பாதரட்சைகள் .. | 101,000 | 1,62,700 | 1,68,490 |
| இலங்கை ஒட்டுப்பலகைக் கூட்டுத்தாபனம் .. | சதுர அடி, 3 ஒட்டுப் பலகை .. | 1,10,63,000 | 1,35,58,000 | 1,22,15,658 |

மூலம்: உரிய கூட்டுத்தாபனங்களிலிருந்து பெறப்பட்ட தரவுகள்

எனவே இரசாயன, எண்ணெய் கொழுப்பு ஒட்டுப்பலகை ஆகிய மூன்று கூட்டுத் தாபனங்களை விட மற்றையவை 1963ம் ஆண்டிலும் பார்க்க 1964ம் ஆண்டில் கூடிய உற்பத்தியைச் செய்தன என்பது காணக்கிடக்கின்றது. இவ்வுற்பத்தியிலேற்பட்ட திருத்தம் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் கிடைக்கப் பெறும் உற்பத்தி ஆற்றலின் கூடுதலான உபயோகத்தின் காரணமாகவே ஏற்பட்டதெனலாம். இவ்வித சந்தர்ப்பங்களை வழக்கமாக வளர்ச்சியைப் பொறுத்தமட்டில் ஆரம்ப நிலைகளிலுள்ள கைத்தொழிற்களில் எதிர்பார்க்கலாம். சீனிக் கூட்டுத்தாபத்தினது உற்பத்தி உயர்வுக்கு பெருமளவு காரணம், அதிகரித்த கரும்புச் பயிர்ச் செய்கையே. காகிதக் கூட்டுத் தாபனத்தைப் பொறுத்த மட்டில் இவ்வுயர்வுக்கு பொறி முறை மாற்றங்களும் பெறப்பட்ட பொறிகளின்மேற் செய்யப்பட்ட திருத்தங்களுமே முக்கிய காரணமாம். கூடுதலான அனுபவமும் திருந்திய திறமையும் பெற்ற தொழிலாளர்களுடன், பீங்கான் கூட்டுத்தாபனமும், திருந்தியதும், கூடுதலான அளவிலும் தனது பொருட்களை உற்பத்தி செய்ய முடிந்தது.

உற்பத்தியானது பொதுவிலே விரிவு காண முனைந்திருப்பினும் பல கைத்தொழில்களிலே இவ்வுற்பத்தி அமைக்கப்பட்டிருக்கும் பொறி, இயந்திர உற்பத்தி ஆற்றலைப் பூரணமாகப் பயன்படுத்துவதாக இல்லை. இதற்குச் சிறந்ததொரு உதாரணம், தனது உற்பத்தி ஆற்றலின் பத்திலொரு பாக உற்பத்தியைச் செய்யும்

சீனிக் கூட்டுத்தாபனபாகும். அறுவடைக்குத் தேவையான வேலையாட்களையும், திறமை வாய்ந்த தொழிலாளர்களையும் பெற்றுக்கொள்வதிலேற்படும் பிரச்சினைகள் அதன் உற்பத்திப் பெருக்கத்திற்கு தடையாக உள்ளன. மேலும் வேலையாட்களது உற்பத்தித் திறனும், அவுஸ்திரேலியாவில் பெறப்படும் ஒரு ஆள் நாளுக்கான நாலு தொன்னுடன் ஒப்பிடும் பொழுது, இலங்கையில் அது 0·4 தொன்களாக மிகக் குறைவாக இருக்கின்றது. எண்ணெய், கொழுப்பு கூட்டுத்தாபனத்தின் எண்ணெய் ஆலையும் மிருகத் தீன், இயந்திரமும் கூட, முறையே மதிப்பிடப்பட்ட உற்பத்தி ஆற்றலின் 35 சதவீதத்தையும், 56 சதவீதத்தையுமே பயன்படுத்தும் விதமாக இயங்குகின்றன. முழு உற்பத்தி ஆற்றலின் உபயோகத்திற்குத் தடையாக, எண்ணை ஆலையின் உப பொருட்களிற்கு வெளிச் சந்தைகள் கிடைக்கப் பெறாதமையும், செலவு குறைந்த சிறு உற்பத்தியாளர்களிடமிருந்து ஏற்படும் கடும் போட்டியின் விளைவாக கலவைக் கோழித்தீன் கேள்வியில் ஏற்படும் தளம்பல்களையும் முக்கிய காரணங்களாகக் கூறலாம்.

காகித, இரசாயன கனிப்பொருள் மணல் ஆகிய கூட்டுத்தாபனங்களும் கூட உற்பத்தி ஆற்றலின் ¾ பங்கினையே உற்பத்தி செய்தியங்குகின்றன. காகிதக் கூட்டுத்தாபனம் உள்நாட்டு மூலப் பொருடகளைப் பெறுவதிலும், வேலையாட்களைப் பெறுவதிலும் அவ்வளவு கஷ்டங்களை அனுபவிக்காதுவிடினும் அறுவடை காலப் போது வேலையாட்கள் வேலைக்கு வராமல் இருக்கும் பிரச்சினையை எதிர்நோக்க வேண்டியிருக்கின்றது. இரசாயனக் கூட்டுத்தாபனம் தான் உற்பத்தி செய்யும் குளோறினிற்கு வேண்டிய சந்தைகளைப் பேற இயலாதிருப்பது, உற்பத்தி விரிவிற்குத் தடையாக இருக்குன்றது. உண்மையில் 1964ல் உற்பத்தி, பெருமளவு நடைபெற்ற இரு வேலை நிறுத்தங்கள், இயந்திரம் பழுதுபட்டமை ஆகிய இரு காரணங்களினுல் வீழ்ச்சியுற்றது. ஓட்டுப்பலகைக் கூட்டுத்தாபனத்தின் உற்பத்தியும் இதே விதக் காரணங்களினுல் 1964ல் வீழ்ச்சியடைந்தது.

அரசாங்கத்துறைக் கைத்தொழில்களின் உற்பத்தியில் ஏற்பட்ட பொது அதிகரிப்பானது, உற்பத்திச் செலவுகளை மட்டப்படுத்துவதற்கு தவிர்த்து சில கூட்டுத்தாபனங்களில் ஒரு அலகிற்கான உற்பத்திச் செலவு, மாருச் செலவுகள் கூடிய உற்பத்தியின் மேலாக விநியோகிக்கப்பட்டதன் காரணமாக உண்மையில் வீழ்ச்சியடைந்தது. வேறு சில தாபனங்களில் செலவுகள், ஒன்றில் மாற்றமுருமலோ, அன்றி சிறிது ஏற்றமடைந்தோ காணப்பட்டன. இதற்குக் காரணம், உற்பத்தி விரிவினுலேற்பட்ட பலனுக்கெதிராக சமபலனுடனே அன்றிக் கூடுதலாகவோ கூலிகள் மூலப் பொருட்களினது விலை உயர்வு, உற்பத்தியாளர் விற்பனை வரி விதிப்பு போன்ற விளைவுகள் எழுந்தமையே.

கூட்டுத்தானங்கள் 1964ம் ஆண்டில் தமது பொருட்கள் மீது விதித்த விலைகள் 1963ம் ஆண்டிலுள்ளதைப் போன்றே இருந்தன. பல்வேறு கூட்டுத்தாபனங்களது விலைக் கொள்கைகள் பல முரனுன அம்சங்களைக் கொண்டிருந்தன. சிமெந்து, சீனி காகிதக் கூட்டுத்தாபனங்கள், தமது பொருட்களின் விலைகளை, அப்பொருட்களின் இறக்குமதி விலைகளுடன் செலுத்தப்படவேண்டிய இறக்குமதித் தீர்வைகளைக் கூட்டி நிர்ணயித்தன. எண்ணை, கொழுப்பு கூட்டுத்தாபனத்தினது மிருகத் தீனும் தோற்பொருட் கூட்டுத்தாபனத்தினது பொருட்களும், பீங்கான் ஓட்டுப்பலகைக் கூட்டுத்தாபனப் பொருட்களும் உற்பத்திச் செலவுடன் சேர்க்கப்பட்ட லாப எல்லையைக் கொண்ட விலைக் கொள்கைக்குட்பட்டனவாம். மற்றைய கூட்டுத்தாபனங்களைப் போலல்லாது தோற்பொருட் கூட்டுத்தாபனம் தனது பொருட்களை விற்பதில் கடும் போட்டியை எதிர்நோக்க வேண்டி இருப்பதால், அதன் பாதரட்சைகளின் விலைகள் போட்டி நிலைகளிலிருப்பதவசியமாகின்றது. முழுவதிலும் ஏற்று

மதிக்கெனவே உற்பத்தி செய்யும் கனிப்பொருள் மணல் கூட்டுத்தாபனமும் இது போன்றே உலக சந்தை விலைகளுக்கமைய போட்டியான விதத்தில் விலைகளை நிர்ணயிப்பதவசியமாகிறது.

அரசாங்கத் துறைக் கைத்தொழில்களில் 1964ல் ஏற்பட்டிருக்கும் திருந்திய உற்பத்தி இயக்கம், அவற்றினது நிதி நிலைமையில் பிரதிபலிக்கப்பட்டுள்ளது. ஒன்றைத் தவிர, ஏனைய கூட்டுத்தாபனங்கள் அனைத்தும், 1963ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 1964ம் ஆண்டில் கூடிய லாபத்தை (அன்றிக்குறைந்த நட்டத்தை) அடைந்திருக்கின்றன என்பதைக் கீழ்த்தரப்பட்டிருக்கும் அட்டவணை காட்டுகின்றது.

அட்டவணை II (ஐ) ஆ—2

## 1963ம் ஆண்டிலும் 1964ம் ஆண்டிலும் 12 அரசாங்கக் கூட்டுத் தாபனங்களால் பெறப்பட்ட இலாபங்கள்

| கூட்டுத்தாபனத்தின் பெயர் | 1963 இலாபம்/ நட்டம் ரூபா | 1964 இலாபம்/ நட்டம் ரூபா | 1964ம் ஆண்டில் பயன்படுத்தப்பட்ட மூலதனம் ரூபா | பயன்படுத்தப்பட்ட மூலதனத்தின் வீதமாக 1964ம் ஆண்டுக்குரிய இலாபம் |
|---|---|---|---|---|
| இலங்கைச் சீமெந்துக் கூட்டுத் தாபனம் .. .. | இலாபம் 60,45,418 | இலாபம் 61,36,198 | 8,10,50,893 | 7·57 |
| தேசிய நெசவுக் கூட்டுத்தாபனம் .. | வி. கி. | இலாபம் 11,50 000 | 4,40,00,000 | 2·61 |
| இலங்கைச் சீனிக் கூட்டுத்தாபனம் .. | நட்டம் 34,00,000 | இலாபம் 5,00,000 | 3,50,00,000 | 1·43 |
| கிழக்குப் பகுதிக் காகிதக் கூட்டுத் தாபனம் .. | இலாபம் 82,068 | நட்டம் 3,71,156 | 2,72,00,000 | |
| தேசிய சிறு கைத்தொழித்தாபனம் .. | நட்டம் 7,00,000 | நட்டம் 6,90,000 | 1,19,98,685 | |
| பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம் | நட்டம் 7,79,536 | நட்டம் 7,30,000 | 1,05,00,000 | |
| இலங்கை எண்ணெய், கொழுப்புக் கூட்டுத்தாபனம் .. .. | வி. கி. | நட்டம் 3,50,000 | 90,58,575 | |
| இலங்கைப் பீங்கான் பொருட் கூட்டுத்தாபனம் .. .. | இலாபம் 3,51,000 | இலாபம் 5,07,892 | 90,00,000 | 5·64 |
| இலங்கை கனிப் பொருட் கூட்டுத் தாபனம் .. .. | நட்டம் 6,25,778 | இலாபம் 1,03,000 | 80,96,039 | 1·27 |
| இலங்கைத் தோல் கூட்டுத்தாபனம் .. | இலாபம் 4,43,124 | இலாபம் 4,78,100 | 66,63,998 | 7·17 |
| கைத்தொழித் தோட்டக் கூட்டுத் தாபனம் .. | வி. கி. | நட்டம் 6,373 | 55,22,144 | |
| இலங்கை ஒட்டுப் பலகைக் கூட்டுத் தாபனம் .. .. | இலாபம் 1,39,326 | இலாபம் 2,67,800 | 52,04,581 | 5·14 |
| மொத்தம் .. | இலாபம் 15,55,622 | இலாபம் 69,95,461 | 25,32,94,915 | 26·7 |

வி.கி = விபரம் கிடைக்கவில்லை.

மூலம்: உரிய கூட்டுத்தாபனங்களிலிருந்து பெறப்பட்ட தரவுகள். அவ்வெண்தொகைகள் தற்காலிகமானவையும், கணக்குப் பரிசோதனைக்கு உட்பட்டனவையுமாகும்.

அட்டவணை IIல் தரப்பட்டுள்ள 12 கூட்டுத்தாபனங்களுள், 7 லாபத்தையோ அன்றி மிகையையோ காட்டின. நான்கு தாபனங்களில் இம்மிகை உண்மையில் பயன்படுத்தப்பட்ட முதலீட்டின் 5 வீதத்திற்கு மேலாக அமைந்தது. 12 தாபனங்களிலும் பயன்படுத்தப்பட்ட முதலீட்டின் மீதான சராசரி வருவாய் வீதம், 2·76 சதவீதமாக இருந்தது. கூட்டுத்தாபனங்களது நிதி நிலைமையிலேற்பட்ட திருத்தம் நம்பிக்கையூட்டும் ஒரு அம்சமாகும். அரசாங்கத்துறை கைத்தொழில்கள் மேலும் அவற்றிற்கு வேண்டிய மூலதனத்திற்கும் வளர்ச்சிக்கும் இம்மிகைகளைப் பெறுவது அவசியமாகும். மிகைகளைப் பெற வேண்டின் அதற்குரிய வெளிப்படை வழி, உற்பத்தி ஆற்றலின் பூரண உபயோக நிலைக்கு உற்பத்தியை உயர்த்துதலே, இதன் பயனுக ஒரு அலகிற்கான உற்பத்திச் செலவுகள் குறைவதுடன், லாப எல்லையும் உற்பத்திப் பெருக்கத்துடன் உயரும். பல பொருட்களைப் பொறுத்த மட்டில் அவற்றின் இவ்வித அதிகரித்த உற்பத்திக்கு போதுமான கேள்வி இருக்கின்றது.

## புதிய கைத்தொழில் திட்ட முயற்சிகள்:

பல புது அரசாங்க கைத்தொழில் முயற்சிகளிலே முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இவற்றின் தாபிதம் பலதரப்பட்ட நிலைகளிலே முன்னேறியுள்ளன. எஃகுக் கூட்டுத்தாபனத்தின் சுருள் எஃகு ஆலையும், கம்பி ஆலையும் இவ்வாண்டில் கட்டப்பட்டு, 1966ம் ஆண்டின் முற்பகுதியில் அவ்வேலை முடிவடையக்கூடும். வகுக்கப்பட்ட கால அட்டவணைக்கமைய ரயர் கூட்டுத்தாபனத்தின் கட்டட அமைப்பு வேலையும், தொழிலாளர்களுக்கு அளிக்கப்படும் பயிற்சியும் நடந்துள்ளன. ஒரு வருடத்தில் 250,000 ரயர்களை உற்பத்தி செய்யக்கூடிய இத்தொழிற்சாலை 1965ல் தனது உற்பத்தியை ஆரம்பிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. கட்டடத்திற்கு வேண்டிய காணித்திருத்தவேலையையும் தொழிற்சாலைக் கட்டட வேலையையும் பொறுத்த ஆரம்பவேலைகளை காகித மட்டை, கோதுமை அரைவு ஆலைக் கூட்டுத்தாபனங்கள் மேற்கொண்டுள்ளன.